யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூலை - 2015

## Term Examination, July - 2015

FWC

தரம் :- 12 (2016) வணிகக்கல்வி

பகுதி II

**ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.**

பகுதி I

01.
1. விருப்பத்திற்கும் கேள்விக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக.
2. நுகர்வுப் பொருட்களை வகைப்படுத்திச் சுருக்கமாக விளக்குக.
3. வணிகங்களுக்குப் பல்வேறுபட்ட நோக்கங்கள் இருக்கலாம். அவற்றில் நான்கினைக் குறிப்பிடுக.
4. ''வணிகம் ஒன்று புறச்சூழல் காரணிகளுக்கு மேலதிகமாக அகச்சூழல் காரணிகள் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும்'' இக்கூற்றுக்கு நீர் உடன்படுகின்றீரா? காரணம் தருக.
5. வணிகம் ஒன்றில் அக்கறை காட்டும் தரப்பினர்களைக் (Stakeholders) குறிப்பிட்டு, அத்தரப்பினர் தொடர்பாக வணிகம் எதிர்பார்க்கும் பங்களிப்புக்களைத் தனித்தனியே விளக்குக.

(5x2=10 புள்ளிகள்)

02.
1. வணிகங்களினால் வாடிக்கையாளர், சமூகம் தொடர்பாக நிறைவேற்ற வேண்டிய சமூகப் பொறுப்புகளைத் தனித்தனியே விபரிக்குக.
2. சமூகப் பொறுப்பு (Social Responsibility), சமூக விழுமியம் (Business Ethics) என்பவற்றால் நீர் கருதுவது யாது?
3. வரிவருமானத்திற்கும் வரியல்லா வருமானத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.
4. இலங்கை தரக்கட்டளைப் பணியகம் பிறநாட்டு வியாபாரம் தொடர்பாக தரங்களை அமுல்படுத்தும் முறைகளை விளக்குக.
5. பங்குடைமை ஒப்பந்தம் ஒன்றில் கட்டாயமாக உள்ளடக்கப்பட வேண்டிய முக்கியமான தகவல்களை வரிசைப்படுத்துக.

(5x2=10 புள்ளிகள்)

03.
1. சாதாரண பங்குகளுக்கும் முன்னுரிமைப் பங்குகளுக்கும் இடையிலான இரண்டு ஒற்றுமைகளையும் இரண்டு வேற்றுமைகளையும் குறிப்பிடுக.
2. (அ) வரையறுத்த பொதுக்கம்பனி ஒன்று மூலதனத்தைப் பெறும் இரு பிரதான மூலங்கள் யாவை?
   (ஆ) அந்த மூலங்கள் ஒவ்வொன்றினதும் இரு நன்மைகளைத் தனித்தனியே விளக்குக.
3. அங்கீகாரம் அளிப்பவரினால் அங்கீகாரம் பெறுபவருக்கு வழங்கப்படும் வசதிகளைக் குறிப்பிடுக.
4. வரையறுத்த பொதுக்கம்பனியுடன் ஒப்பிடுகையில் வரையறுத்த கூட்டுறவுச்சங்கம் வேறுபடும் முறைகளைக் குறிப்பிடுக.
5. முயற்சியாளர்களின் தேர்ச்சிகளை விருத்தி செய்யக்கூடிய முறைகளைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக.

(5x2=10 புள்ளிகள்)

## பகுதி II

**04.**

1. நாடொன்றின் பொருளாதார அபிவிருத்திக்குச் சிறிய வணிகங்கள் பல்வேறு முறைகளில் உதவுகின்றன.

   (அ) சிறய வணிகங்களை ஆரம்பிக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் எவை?

   (ஆ) ஒரு நாட்டிலே சிற்றளவு வணிகங்களின் அபிவிருத்திக்கு அவசியமான பின்னணிக் காரணிகளை விளக்குக.

2. தற்போது பெரும்பாலான வங்கிச் சேவைகள் இலத்திரனியல் ஊடாகவே செயற்படுத்தப்படுகின்றது. இலத்திரனியல் வங்கிச்சேவைகள் நான்கு தருக.

3. காசோலையில் "புறக்குறிப்பிடுதல்" என்பதனால் கருதப்படுவது என்ன? புறக்குறிப்பிடல் செய்யப்படும் சந்தர்ப்பங்களை விபரிக்குக.

4. பொருள் உற்பத்தி வணிகத்திற்கும் சேவை உற்பத்தி வணிகத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.

5. உரிமம் பெற்ற வணிக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற விசேட வங்கிகளுக்கும் இடையிலான வேற்றுமைகளைத் தருக.

(5x2=10 புள்ளிகள்)

**05.**

1. இன்று வணிகர்கள் மத்தியில் மேலதிகப்பற்று பிரசித்தமான ஒரு கடன்மூலமாகக் காணப்படுகின்றது.

   (அ) வங்கி மேலதிகப்பற்று என்றால் என்ன?

   (ஆ) வணிகர் ஒருவருக்கு இதன் நன்மைகளை விளக்குக.

2. வணிகங்களது வாழ்தன்மைக்கு காப்புறுதி எவ்வாறு பங்களிப்புச் செய்ய முடியும் என்பதை விளக்குக.

3. மீள் காப்புறுதியினால் காப்புறுதிக் கம்பனிகளுக்கு மட்டுமன்றி காப்புறுதி செய்பவர்களுக்கும் அனுகூலங்கள் உண்டு. அத்தகைய அனுகூலங்கள் இரண்டை விபரிக்குக.

4. பொருட்களை ஏற்றிச்செல்வது தொடர்பாகத் தெருப்போக்குவரத்துடன் புகையிரதப் போக்குவரத்தை ஒப்பிடும் போது புகையிரதப் போக்குவரத்து என்ன நன்மைகளைக் கொண்டுள்ளது?

5. போக்குவரத்து அமைப்பு ஒன்றின் அடிப்படை அம்சங்களை விபரித்து ஒவ்வொரு அடிப்படைகளுக்குமான உதாரணங்கள் இரண்டு வீதம் குறிப்பிடுக.

(5x2=10 புள்ளிகள்)

**06.**

1. (அ) ஏனைய வகையான தொடர்புபடுத்தலுடன் ஒப்பிடுகையில் வாய்மொழி மூலமான தொடர்புபடுத்தலில் உள்ள பிரதான நன்மை யாது?

   (ஆ)வணிகக் கருமங்களுக்கு தொடர்பாடல் ஏன் முக்கியமானதென விளக்குக.

2. இலத்திரனியல் வணிகத்தின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் தனித்தனியாக விபரிக்குக.

3. சில்லறை வியாபாரங்களின் நவீன போக்குகள் நான்கினைக் குறிப்பிடுக.

4. உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை விநியோகிப்பதற்கு இடைநடுவர்களைப் பயன்படுத்துவதன் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் தருக.

5. குறித்த பண்டங்களின் தொக்கு ஒன்றை இறக்குமதி செய்ய விரும்பும் வணிகர் ஒருவர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளுக்கான படிமுறைகளைக் குறிப்பிடுக.

(5x2=10 புள்ளிகள்)